**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.280/2013**
**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அழகம்மாள் | **Caste** | : |
| **Husband Name** | : காளிதாஸ் | **Calling** | : தலைமைக்காவலர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : குளத்துார் | **Age** | : **41/2026** |
| | | **Dated** | : **14.08.2026** |

**14.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–6 **திரு.அழகம்மாள்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் NIBCID பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2013ம் ஆண்டு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது தாலுகா காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த பெண் சார்பு ஆய்வாளர் சில்வியா 02.03.2013 அன்று நிலையத்தில் இருந்தபோது பெண் சார்பு ஆய்வாளர் பதிவு செய்த தாலுகா குற்றஎண்.77/2013 சட்டப்பிரிவுகள் 147,294(b), 448,427,323,506(ii) ன் படி எதிரிகள் அருண்குமார், தினேஷ்குமார், அக்கம்மாள், பொன்ராஜ், அஷ்டலட்சுமி ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்த பின்பு மேற்படி

எதிரிகள் நீதிமன்றத்தின் மூலம் முன்ஜாமின் பெற்று 01.03.2013 தேதி முதல் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தினமும் 10.00 மணிக்கு கையொப்பம் செய்யவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் 02.03.2013ம் தேதி சில்வியா நிலைய பொறுப்பில் இருந்தபோது எதிரிகள் காலை 9.35 மணியளவில் வந்து சார்பு ஆய்வாளர் அறைக்குள் கையொப்பம் செய்யவேண்டும் என்று சொன்னார்கள்.

அதற்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் 10.00 மணிக்கு கையொப்பம் செய்ய வாருங்கள் என சொன்னார். அதற்கு அவர்கள் பெண் சார்பு ஆய்வாளரை பார்த்து ஏன் எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தீர்கள் என்று வாக்குவாதம் செய்தார்கள். பின்பு நானும் என்னுடன் பணியில் இருந்த மற்ற காவலர்களும் எதிரிகளை வெளியே செல்லுமாறு சொல்லி விலக்கிவிட்டோம். அதன் பின்பு நடந்த சம்பவத்திற்காக திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய பெண் சார்பு ஆய்வாளர் சில்வியா புகார் கொடுத்து அதன் பெயரில் திண்டுக்கல் நகர் வடக்கு சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் நான் 2013ம் வருடம் முதல் நிலை காவலராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் ரவுண்ரோடு பகுதியில் அமைந்துள்ளது என்றாலும் ரோட்டில் இருந்து காவல் நிலையத்தை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். 2013 காலகட்டத்தில் போலிஸ் டவருக்காக காவல் நிலையம் அருகே கேமரா பொருத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதன்மூலம் காவல் நிலைய அனைத்துவிசயங்கள் தெரியும் என்றால் சரிதான். துர்க்காதேவி, அருண்குமார் என்பவர்கிடையே திருமணம் நடைபெற்றதற்கான எவ்வித ஆவணமும் காவல் ஆய்வாளர் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் காவல் நிலையத்தில் எந்த இடத்தில் வைத்து தகராறு செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஜாமீன் கையொப்பம் செய்தது சம்பந்தமான உத்தரவு மற்றும் கையொப்பம் செய்த நோட்டுபோன்ற ஆவணங்களை விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 முதல் 7வரையிலானவர்கள் என்னுடன் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான்.நான் சம்பவத்தின்போது அங்கு தான் பணிபுரிந்தேன் என்பதற்காக GD Entry மற்றும் சான்று ஆவணங்கள் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சியாக யாரையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

வீடியோ ஆதாரம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கூட்டமாக வந்தார்கள் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.உயர்அதிகாரியிடம் தகவல் சொல்லியபின் புகார் கொடுத்து FIR பதிவு செய்தனர் என்றும்  அந்த அதிகாரியின் வேலை மற்றும் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் இடையே முன்விரோதம் இருந்ததால் நான் புகார்தாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.14 12:43:15 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.280/2013**
**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மனோகரன் | **Caste** | : |
| **Father's Name** | : பழனியாண்டி | **Calling** | : ஆய்வாளர் (ஓய்வு) |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : நிலக்கோட்டை | **Age** | : 67/2026 |
| | | **Dated** | : 14.08.2026 |

**14.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 **திரு.மனோகரன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தமிழ்நாடு காவல் துறையில் குற்றால காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு வெற்று தற்போது திண்டுக்கலில் குடியிருந்துவருகிறேன். கடந்த 2013ம் ஆண்டு திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது என்னுடன் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் சில்வியா 02.03.2013 அன்று நிலையத்தில் இருந்தபோது பெண் சார்பு ஆய்வாளர் பதிவு செய்த தாலுகா குற்றஎண்.77/2013 சட்டப்பிரிவுகள் 147,294(b), 448,427,323,506(ii) ன் படி எதிரிகள் அருண்குமார், தினேஷ்குமார், அக்கம்மாள், பொன்ராஜ், அஷ்டலட்சுமி ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்த பின்பு மேற்படி

எதிரிகள் நீதிமன்றத்தின் மூலம் முன்ஜாமின் பெற்று 01.03.2013 தேதி முதல் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தினமும் 10.00 மணிக்கு கையொப்பம் செய்யவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் 02.03.2013ம் தேதி சில்வியா நிலைய பொறுப்பில் இருந்தபோது எதிரிகள் பெண் சார்பு ஆய்வாளரை பார்த்து ஏன் பொன்ராஜ், அஷ்டலட்சுமி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தீர்கள் என்று வாக்குவாதம் செய்தார்கள். பின்பு நாங்கள் சென்று விலக்கிவிட்டோம். அதன் பின்பு நடந்த சம்பவத்திற்காக திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய பெண் சார்பு ஆய்வாளர் புகார் கொடுத்து அதன் பெயரில் கோபாலகிருஷ்ணன் என்ற சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் நான் 2013ம் வருடம் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் ரவுண்ரோடு பகுதியில் அமைந்துள்ளது என்றாலும் ரோடடில் இருந்து காவல் நிலையத்தை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். 2013 காலகட்டத்தில் போலிஸ் டவருக்காக காவல் நிலையம் அருகே கேமரா பொருத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதன்மூலம் காவல் நிலைய அனைத்துவிசயங்கள் தெரியும் என்றால் சரிதான். துர்க்காதேவி, அருண்குமார் என்பவர்கிடையே திருமணம் நடைபெற்றதற்கான எவ்வித ஆவணமும் காவல் ஆய்வாளர் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மீது தாலுகா காவல்நிலையத்தில் போடப்பட்ட வழக்கின் விசாரணைக்கு பின்பு எதிரிகள் விடுதலைஆன விசயம் தெரியுமா என்றால் கேள்விப்பட்டேன்.

எதிரிகள் காவல் நிலையத்தில் எந்த இடத்தில் வைத்து தகராறு செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஜாமீன் கையொப்பம் செய்தது சம்பந்தமான உத்தரவு மற்றும் கையொப்பம் செய்த நோட்டுபோன்ற ஆவணங்களை விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 முதல் 7வரையிலானவர்கள் என்னுடன் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சியாக யாரையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வீடியோ ஆதாரம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கூட்டமாக வந்தார்கள் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். உயர்அதிகாரியிடம் தகவல் சொல்லியபின் புகார் கொடுத்து FIR பதிவு செய்தனர் என்றும் அந்த அதிகாரியின் வேலை மற்றும் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஏற்கனவே எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் இடையே முன்விரோதம் இருந்ததால் இந்த புகார் தவறாக எதிரிகள் மீது தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.08.14 12:43:23 +0530

Judicial Magistrate No.II
Dindigul.